# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 364 /பேரூ/2025**
**நாள் : 24.07.2026**

V. விஜயகுமார்,
கல்வீரம்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பாரதியார் பல்கலைகழக அஞ்சல், கல்வீரம்பாளையம், பாரதி நகர், எண். 16/2, தனலட்சுமி இல்லம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. விஜயகுமார் என்பவரது 05.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று பெறப்பட்டு, 364/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பாரதியார் பல்கலைகழக அஞ்சல், கல்வீரம்பாளையம், பாரதி நகர், எண். 16/2, தனலட்சுமி இல்லம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. V. விஜயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 05.08.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் தற்காலிகமாக வசித்து வருகின்றேன்.

"திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், செயின்ட் மேரீஸ் பள்ளி தெருவில் திரு. வெ. ஜெகதீஸ்வரன் என்பவர் பேரூராட்சி உரிமம் மற்றும் பிற துறைகளிடம் தடையின்மை சான்று பெறாமலும் S.S.Bike Parkingஐ சட்டவிரோதமாக நடத்தி வருகிறார். மேலும் இதனை சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்துள்ளது. மேலும் சிறு குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கும் அக்குழந்தைகள் கடக்கும் பாதைக்கும் மிகவும் அருகில் அமைந்துள்ளது. இதனால் பெரும் உயிர்ச்சேதம் மற்றும் அரசாங்கத்திற்கு அவப்பெயர் ஏற்படும் என்பதை கவனத்தில் கொண்டு பிற

துறைகள் தடையின்மை சான்று வழங்க மறுத்து விட்டனர். இச்சட்ட விரோத செயல் குறித்து பலமுறை கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு புகார்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் உயிரைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் இச்சட்ட விரோத செயலுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார். இதனால் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள மறுக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே இப்புகார் மனு மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் பள்ளி குழந்தைகளின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட்டு வரும் S.S.Bike Parkingக்கு தடை விதிக்க வேண்டுகின்றேன்.

மேலும் இந்த சட்ட விரோத செயலுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலக செயல் அலுவலர் மீது விசாரணை மேற்கொள்ளவும், அவர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் விசாரணையில் தகுந்த ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன் என்பதை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திரு. V. விஜயகுமார் என்பவர் 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.17, செயின்ட் மேரீஸ் பள்ளி தெருவில் திரு. வெ. ஜெகதீஸ்வரன் என்பவர் பேரூராட்சியின் உரிமம் இல்லாமலும் மற்றும் பிற துறைகளின் தடையின்மை சான்று பெறாமலும் குடியிருப்புகள் சூழ்ந்துள்ள இடத்தில் S.S.Bike Parkingஐ சட்ட விரோதமாக நடத்தி வருகிறார்.

- மேற்காணும் வாகனங்கள் நிறுத்தும் இடமானது குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கும், அக்குழந்தைகள் கடக்கும் பாதைக்கும் அருகில் இருப்பதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

- மேலும் 14.12.2019-ல் தேசிய மக்கள் நீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரருக்கு வழங்கப்பட்ட இடத்தை திரு. வெ. ஜெகதீஸ்வரன் ஆக்கிரமிப்பு செய்து அக்குடியிருப்பு பகுதியை வாகனம் நிறுத்தும் இடமாக நடத்தி வருகின்றார்.

- இது தொடர்பாக கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலகம், உதவி இயக்குநர் அலுவலகம், திருவள்ளூர் மற்றும் காவல் துறைக்கும் பலமுறை புகார்கள்

அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்தில் நான் அளித்த புகாருக்கு ஸ்கூட்டர் ஸ்டாண்ட் நடத்தப்படவில்லை எனவும் ஜெகதீஸ்வரன் என்பவருடைய நண்பர்கள் சிலர் வாகனங்கள் காலையில் நிறுத்திவிட்டு மாலையில் எடுத்து செல்வதாக 12.06.2024ல் எழுத்துப்பூர்வமாக பொய்யான விளக்கத்தை காவல் நிலையத்தில் அளித்துள்ளார்.

- S.S.Bike Parking தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய தகவல்களுக்கு தீயணைப்புத் துறை, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் மூலம் எந்தவித அனுமதியும் வழங்கவில்லை என தகவல் வழங்கப்பட்டுள்ளது.

- கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 591/7A, 591/4C ல் எனக்கு சொந்தமாக வீடுகள் இல்லை. ஆனால் எனக்கு வீடுகள் இருப்பதாக பேரூராட்சியால் சொத்து வரி விதித்து அதற்கான கட்டணத்தை பேரூராட்சியே முதலில் செலுத்திவிட்டு, பின்னர் என்னிடம் அதற்கான தொகையை செலுத்த கட்டாயப்படுத்துகிறார்கள்.

- பொன்னேரி, சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். 96/2022ன்படி எனது இளைய சகோதரர் வி. ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண். 591/7A என்ற இடத்தில் 2 அடி பரப்பளவு உள்ள இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தொடர்ந்துள்ளார். அதற்கு எதிராக நில ஆக்கிரமிப்பு குறித்து பதில் வழக்கு எண். 210/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- கும்மிடிப்பூண்டி பேரூராட்சியின் உரிமம் இல்லாமல் செயல்பட்டு வரும் S.S.Bike Parkingக்கிற்கு வி. ஜெகதீஸ்வரன் என்பவர் அவரது மனைவி நந்தினி ஜெகதீஸ்வரன் என்ற பெயரில் முறைகேடாக தொழில்வரி கட்டியுள்ளார்.

- இந்நிலையில், பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் மேலும் நான் வெளியூரில் வசிப்பதை அவருக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டு வாகனங்களை எனக்கு சொந்தமான இடத்தில் நிறுத்தியும் என்னுடைய இடத்திற்கு செல்வதற்கு இடையூறும் மற்றும் விபத்து ஏற்படும் வகையில் நடத்தப்பட்டு வரும் S.S.Bike Parkingஐ தடை செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

5. எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரியும் என்னை கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சிக்கு செயல் அலுவலர்

(பொறுப்பு )ஆக நியமனம் செய்து ஆணையிடப்பட்டதின் அடிப்படையில் 06.03.2026 முற்பகல் முதல் பொறுப்பேற்று பணிபுரிந்து வருகிறேன்.

- இன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. V. விஜயகுமார் என்பவர் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

- மனுதாரரின் சகோதரர் திரு. வி. ஜெகதீசன் என்பவர் பேரூராட்சிக்குட்பட்ட செயின்ட் மேரீஸ் தெருவில் பேரூராட்சியின் உரிமம் இன்றியும், பிற துறைகளில் தடையின்மை இன்றியும் குடியிருப்பு பகுதியில் S.S.Bike Parkingஐ சட்ட விரோதமாக நடத்தி வருகிறார். இதனால் பள்ளிக் குழந்தைகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

- இது குறித்து கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- சர்வே எண். 591/7A, 591/4Cல் மனுதாரருக்கு சொந்தமான வீடுகள் இல்லாத நிலையில் பேரூராட்சியால் மனுதாரரின் பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்து பேரூராட்சியால் முதலில் கட்டணம் செலுத்திவிட்டு பின்னர் மனுதாரரிடம் கட்டணம் செலுத்துமாறு வலியுறுத்துவதாக புகார் தெரிவித்துள்ளார்.

- மனுதாரரின் சகோதரர் திரு. வி. ஜெகதீசன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் (புல எண். 591/7A) மனுதாரரான விஜயகுமார் என்பவர் மீது பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண். 96/2022).

- S.S.Bike Parkingக்கு மனுதாரர் சகோதரரான வி.ஜெகதீசன் என்பவரின் மனைவியான நந்தினி ஜெதீஸ்வரன் என்ற பெயரில் பேரூராட்சியால் தொழில்வரி விதிக்கப்பட்டுள்ளது என புகார் தெரிவித்து மேற்காணும் S.S.Bike Parkingஐ தடை செய்யுமாறு கோரியுள்ளார்.

- மேற்காணும் புகார் தொடர்பாக என்னால் நேரடி ஆய்வு செய்து உரிய அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க 10 நாட்கள் கால அவகாசம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 13.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது தெரிவித்தபடி, மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே தனது 27.03.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 77/2026/அ1ல் தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் –

கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 செண்ட்மேரீஸ் பள்ளித் தெரு பகுதியில் SS Bike Parking என்ற வாகன நிறுத்துமிடம் செயல்பட்டு வந்த இடத்தினை 17.03.2026 அன்று செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் அலுவலக பணியாளர் ஆகியோர் மூலம்

நேரடி ஆய்வு செய்யப்பட்டது. அவ்விடத்தில் 40க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் திரு.வெ.ஜெகதீசன் என்பவருக்கு கும்மிடிப்பூண்டி பேரூராட்சி அலுவலக 17.03.2026 நாளிட்ட அறிவிப்பு கடித ந.க.எண். 77/2026/அ1 மூலம் இருசக்கர வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை 7 தினங்களுக்குள் அகற்றிடுமாறு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

24.03.2026 அன்று வாகன நிறுத்துமிடத்தில் இருசக்கர வாகனங்கள் அகற்றப்பட்டு ஏதும் நிறுத்தப்படவில்லை. அதற்கான புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மனுதாரர் 13.03.2026 அன்றைய விசாரணை நாளன்று தனக்கு சொந்தமான குடியிருப்பு வீட்டிற்கு சொத்துவரி வசூல் செய்வதாக தெரிவித்துள்ளார். தற்போது ஆய்வு செய்யும்போது விஜயகுமார் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடிசை வீட்டிற்கு சொத்துவரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்த நிலையில் குடும்ப உறுப்பினர்களிடையே சொத்து தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி குடிசை வீடு அகற்றப்பட்டுள்ளது. மேற்காணும் சொத்து வரிவிதிப்பினை விதிகளுக்குட்பட்டு நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வில் திரு. வெ. ஜெகதீசன் என்பவரின் மனைவி திருமதி. நந்தினி என்பவர் அனுமதி ஏதும் பெறாமல் தற்காலிகமாக இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் நடத்தி வந்த நிலையில் தொழில்வரி வசூலிக்கப்பட்டது. மேற்காணும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் தற்போது அகற்றப்பட்டுவிட்டதால் தொழில்வரி ஏதும் வசூலிக்கப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது".

மேற்படி வாகனம் நிறுத்துமிடம் அமையப்பட்டிருந்த பகுதிக்கு வார்டு எண். 07 செண்ட்மேரீஸ் பள்ளித் தெரு, வார்டு எண் 02 இரயில்வே ஸ்டேசன் சாலை ஆகிய இரு தெருக்கள் வழியாகவும் வழி உள்ளது. இதில் செண்ட்மேரீஸ் பள்ளித் தெரு பகுதியில் உள்ள வழி கதவு வைத்து பயன்பாட்டில் இல்லாமல் மூடப்பட்டுள்ளது. இரயில்வே ஸ்டேசன் சாலை பகுதியில் உள்ள வழியாகவே இருசக்கர வாகனங்கள் வந்து சென்றுள்ளன. இந்த இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் இயங்குவதால் செண்ட்மேரீஸ் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு எவ்வித இடர்பாடும் ஏற்படுவதில்லை என பள்ளி நிர்வாகத்திடம் விசாரணை செய்ததில் தெரிய வந்தது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்`` என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு. வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.17, செயின்ட் மேரீஸ் பள்ளி தெருவில் திரு. வெ. ஜெகதீஸ்வரன் என்பவர் பேரூராட்சியின் உரிமம் இல்லாமலும் மற்றும் பிற துறைகளின் தடையின்மை சான்று பெறாமலும் குடியிருப்புகள் சூழ்ந்துள்ள இடத்தில் S.S.Bike Parkingஐ சட்ட விரோதமாக நடத்தி வருகிறார் என மனுதாரர் திரு. V. விஜயகுமார் என்பவர் புகார் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும் கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண் 591/7A, 591/4Cல் தனக்கு சொந்தமாக வீடுகள் இல்லாத நிலையில் தன்னிடம் சொத்துவரி செலுத்த பேரூராட்சியில் கட்டாயப்படுத்துகிறார்கள் எனவும் தவிர தனது இளைய சகோதரர் வி. ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண். 591/7A என்ற இடத்தில் 2 அடி பரப்பளவு இடத்தை தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வி. ஜெகதீஸ்வரன் பொன்னேரி, சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு

எண். 96/2022) தொடர்ந்துள்ளார் எனவும் அதற்கு பதில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்திருப்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள S.S. Bike நிறுத்துமிடத்தை பேரூராட்சி செயல் அலுவலர் 17.03.2026 அன்று நேரடி ஆய்வு செய்யப்பட்டதில், அங்கு 40க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருந்ததை தொடர்ந்து, 7 தினங்களுக்குள் அனைத்து வாகனங்களும் அப்புறப்படுத்திட வேண்டும் என திரு. ஜெகதீஸ்வரன் என்பவருக்கு 17.03.2026 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதையும், 24.03.2026 அன்று அனைத்து இருசக்கர வாகனங்களும் அப்புறப்படுத்தப்பட்ட விவரமும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது.

மனுதாரர் தனக்கு சொந்தமில்லாத வீட்டிற்கு சொத்துவரி கட்ட நிர்பந்தம் அளிப்பதாக தெரிவித்துள்ள புகார் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் கள ஆய்வு செய்ததில் மனுதாரர் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடிசை வீட்டிற்கு சொத்துவரி வசூலிக்கப்பட்டு வந்த நிலையில் மேற்காணும் சொத்து தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி குடிசை வீடு அகற்றப்பட்டது எனவும், இந்நிலையில் சொத்துவரி விதிப்பினை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பது அவரது அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் 05.08.2025 நாளிட்ட புகார் மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மனுதாரர் திரு. V. விஜயகுமார் என்பவர் தனது வாக்குமூலத்தில் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுடன் கூடுதலாக தனது இளைய சகோதரர் வி. ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சொந்தமான கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 591/7A என்ற இடத்தில் தான் 2 அடி பரப்பளவு இடத்தை ஆக்கிரமித்து உள்ளதாக பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். 96/2022) தொடர்ந்து அதற்கு பதில் தாக்கல் செய்துள்ளதாக புகாராக தெரிவித்துள்ளார். இவ்வழக்கானது நிலுவையில் உள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதையும் அவரது அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் புகாராக தெரிவித்திருக்கும் திரு. V. ஜெகதீஸ்வரன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண். 591/7A என்ற இடத்தில் 2 அடி பரப்பளவு இடத்தை தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார். இதே பொருள் தொடர்பாக, திரு. V. ஜெகதீஸ்வரன் என்பவரால் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். O.S. No.96/2022) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக மனுதாரர் திரு. V. விஜயகுமார் மற்றும் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி

தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3)(b)ன்படி மனுதாரரின் 05.08.2025 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. V. விஜயகுமார்,
எண். 16/2, தனலட்சுமி இல்லம்,
பாரதி நகர், கல்வீரம்பாளையம்,
பாரதியார் பல்கலைக்கழக அஞ்சல்,
கோயம்புத்தூர் மாவட்டம் 641 046.
2. செயல் அலுவலர்,
கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர். இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/7/26
செயலாளர்
28/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032